# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – I

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 28.01.2016 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (யாழ்ப்பாணம், வடமராட்சி ,வலிகாமம் ,தீவகம் ,முல்லைத்தீவு, துணுக்காய் , கிளிநொச்சி, வவுனியா தெற்கு,வவுனியா வடக்கு, மடு,மன்னார்)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மடு)
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ( மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்- மாகாணக் கல்வித் திணைக்களம்.
- நிர்வாக உத்தியோகத்தர், மாகாண கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம்
- ஆசிரிய வளவாளர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் கூட்டத்திற்கு வருகைதந்த மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு இந்த வருடத்திற்குரிய முதலாவது மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

☞ சென்ற கூட்ட அறிக்கை அனைவருக்கும் அனுப்பி வைத்துள்ளோம். அக் கூட்ட அறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருந்தால் அறிவிக்கலாம்.

☞ கல்வி அபிவிருத்தி குழுக் கூட்டம் இனிவரும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் இறுதி வியாழக் கிழமை நடைபெறும். கௌரவ கல்வி அமைச்சரும் எதிர்வரும் காலங்களில் கலந்து கொள்வதாக அறியத் தந்துள்ளார்.

☞ அடுத்து வேலைகள் தொடர்பான முன்னேற்றங்களை பார்ப்போம்.

☞ நிரல் கல்வி அமைச்சின் வேலைகள் ஆராயப்பட்டது.

☞ தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதேச செயலகத்தில் இரு ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சில பாடசாலைகளுக்கு இவ்வாண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

☞ Indian Assistant வேலைகளுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

☞ அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில் Phase I இற்குரிய பாடசாலைகளுக்கு Surveyor Plan & Master plan தயாரிக்க வேண்டும். மேலும் இப் பாடசாலைகளின் தேவைகளை இனங்கண்டு கொள்வதற்காக குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும்

☞ பாடசாலைகளில் வளப்பகிர்வு தொடர்பாக சுற்று நிருபத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

☞ விழுமியக் கல்வி கற்பிக்காத பாடசாலைகளில் அக்கல்வியை கற்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

☞ E- Lesson இல் கற்பிக்கும் போது CD பாவிப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்

☞ இலவச புத்தக விநியோகம் 98 வீதம் நிறைவடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

☞ பாடசாலை தரிசிப்பு பற்றிய அறிக்கை எமக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பபடல் வேண்டும்.

☞ பாடசாலை சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகள் சுற்று நிருபத்தின் படி நடைபெறுகின்றதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

☞ சுற்றாடல் மேம்பாட்டுச் செயற்பாடு நடைபெறுதலை உறுதிப்படுத்தல் வேண்டும்.

☞ சகல பாடசாலைகளுக்கும் குடிநீர் வசதி , மல சல கூட வசதி வழங்கப்பட்டு இருத்தலை உறுதிப்படுத்தல் வேண்டும்.

☞ அனைத்துப் போட்டிகளும் (தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி), அனைத்து விழாக்களும், கல்விச் சுற்றுலாக்கள் என்பவை இரண்டாம் தவணைக்கு முன்னர் நடத்தி முடித்தல் வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் பெப்ரவரி 10 ஆந் திகதிக்குள் நடத்தி முடித்தல் வேண்டும். சில போட்டிகளிற்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.

☞ மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் புதிய உறுப்பினர் தெரிவு இடம்பெற்று அந்த விபரங்கள் எமக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

☞ 2016 ஆம் ஆண்டிற்குரிய கல்வி அமுலாக்கற் திட்டங்கள் தொடர்பாகவும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சில இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு 12 Mn தரப்படுகின்றது. (ஒரு பிரதேசத்தில் இரண்டு மாதிரி ஆரம்பப் பாடசாலைகள் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாணவர்களும் 70 புள்ளிகளிற்கு மேல் பெறுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இடைநிலைப் பிரிவு மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களில் கூடிய கவனம் எடுப்பதனை உறுதிபடுத்திக்கொள்ளல் வேண்டும். க.பொ.த (சா/த) பரீட்சையில் அனைத்து மாணவர்களையும் தோற்ற அனுமதிப்பதுடன் தோற்றும் மாணவர்கள் அனைவரும் ஆறு பாடங்களில் சித்திபெறுவதுடன் அதில் இரண்டு திறமைச் சித்தி பெற்றுக் கொள்வதனை உறுதிப் படுத்திக் கொள்ளல் வேண்டும். க.பொ.த (உ/த) இல் கணித,விஞ்ஞான பிரிவை 40% ஆகவும், தொழிநுட்ப பிரிவை 20% ஆகவும் வர்த்தகப் பிரிவை 20% ஆகவும்,கலைப் பிரிவை 20% ஆகவும் வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.)

☞ மாணவர் உளநல செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு 300 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர் மகிழ்வகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

☞ விசேட தேவையையுடைய மாணவர்களைக் கவனித்தல் வேண்டும்

☞ அடுத்து நிதி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

☞ 2016 ஆம் ஆண்டிற்குரிய Board of Survey ஜனவரி 31 இற்கு முன்னர் முடிப்பதற்கு குழுவினை அமைத்தல் வேண்டும்.

☞ EMIS இணையத்தளத்தில் விபரங்கள் தரவேற்றம் செய்யப்படாது உள்ளது. பன்னிரண்டு வலயக் கல்வி அலுவலகங்களும் இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்களையும் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் தருதல் வேண்டும்.

# பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | PSDG,TSEP இல் செய்யப்பட்ட வேலைகள் | 2015 ஆம் ஆண்டிற்குரிய சகல வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதால் சகல கட்டடங்களும் பெப்ரவரி (February) 10 ஆம் திகதிக்கு முன்னர் திறக்கப்பட்டு மாணவர்களது பாவனைக்கு உட்படுத்தபடல் வேண்டும். | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 02. | கட்டடங்கள் திறப்பு | கட்டடங்கள் திறப்பு செய்யப்புடும் போது உரிய அனுமதி பெற்று இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும் | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 03. | PSDG | 2016 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டை பெப்ரவரி (February) 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். | • பாடசாலை வேலைகள் பணிப்பாளர்<br>• சகல தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், |
| 04. | TSEP | இத் திட்டமானது 2016 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப் படுவதனால் சகல வேலைகளும் 2016 ஆம் ஆண்டு நவம்பர் (November) மாதத்திற்கு முன்னர் முடிவுறுத்தப்படல் வேண்டும். | • பாடசாலை வேலைகள் பணிப்பாளர்<br>• சகல தொழில் நுட்ப உத்தியோகத்தர |
| 05. | பெறுகைகள் | பெறுகைகள் யாவும் புதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக மேற்கொள்ளல் வேண்டும் | • பிரதம கணக்காளர்,–மா.க.தி,கணக்காளர் – மா.க.அ, சகல வலயக் கணக்காளர்கள் |
| 06. | TSEP உயர் நிலை செயற்பாடுகளுக்குரிய அபிவிருத்தி | அபிவிருத்திபிற்கு 64 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய Plan தயாரிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது அதில் பிரதி ஒன்று செயலாளரிடம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது | • மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) |
| 07. | நிரல் கல்வி அமைச்சால் குடி நீர் மற்றும் மல சல கூட மேம்படுத்தலுக்கு வழங்கப்பட்ட நிதி | வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு குறிக்கப்பட்ட வேலைகள் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் வேலைகள் செய்யப்படாமல் பணம் எடுக்கப்பட்டிருந்தால் அதற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 08. | ஆசிரியர் பதவி உயர்வு | ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் யாவும் ஏப்ரல் (April) மாதத்திற்கு முன்னர் பூரணப்படுத்தபடல் வேண்டும் | • உதவிச் செயலாளர–மா.க.அ<br>• சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) |

| | | | |
|---|---|---|---|
| 09. | அதிபர்களுக்கான சம்பள மாற்றியமைப்பு | சம்பளம் மாற்றியமைக்கப்பட வேண்டிய அதிபர்களுக்கு , சம்பளம் மாற்றம் செய்து எமது அனுமதி பெற்று வழங்கமுடியும். | • உதவிச் செயலாளர- மா.க.அ<br>• சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) |
| 10. | ஆசிரியர் இடமாற்றம் | ஆசிரியர் இடமாற்றமானது 2016/1 சுற்று நிருபத்திற்கு அமைவாக மேற்கொள்வதை உறுதிப்படுத்தல் வேண்டும் | • மாகாணக் கல்விப் பணிப்பாளர் |
| 11. | ஆசிரியர் நியமனம் | புதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக வகுப்பறை ரீதியிலான ஆளனி விபரம் உருவாக்கப்படல் வேண்டும். | • மாகாணக் கல்விப் பணிப்பாளர்<br>• சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 12. | பாதுகாப்பு,சுத்திகரிப்பு | பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்பாளர்கள் நியமிக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து பாடசாலை தொழிலாளிகளை (PKS) வேறு பாடசாலைகளுக்கு இடம் மாற்றல் வேண்டும் | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 13. | ஓய்வூதியம் | ஒரு வருடம் சராசரியாக 200 ஆசிரியர் ஓய்வு பெறுகின்றனர். ஓய்வு பெறும் அன்றே அவர்களுக்குரிய ஓய்வூதியம் வழங்கப்படல் வேண்டும் | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 14. | வாகன அனுமதி | வடக்கு மாகாணத்தை விட்டு கடமை நிமித்தம் வாகனங்களில் வெளியே செல்லும் உத்தியோகத்தர்கள் யாவரும் அனுமதி பெற்ற பின்னர் தான் பயனம் செய்ய வேண்டும். | • செயலாளர்<br>• மாகாணக் கல்விப் பணிப்பாளர் |
| 15. | ஆளனி தரவேற்றம் | புதிய ஆளனிகளை தரவேற்றம் மற்றும் data களை இற்றைப்படுத்தல் (update) வேண்டும் | • உதவிக் கல்விப் பணிப்பாளர்- EMISS |
| 16. | பரீட்சை | தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான சகல தவணைப் பரீட்சைகளும் வலயத்தினால் நடாத்தப்படல் வேண்டும்.மேலும் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையான சகல தவணைப் பரீட்சைகளும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படல் வேண்டும்.<br><br>G.C.E A/L பரீட்சையிற்கு சகல மாணவர்களும் தோற்ற அனுமதிக்கப்படல் வேண்டும். மேலும் சகல மாணவர்களுக்கும் அனுமதி அட்டைகள் வழங்கப்படல் வேண்டும். | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>• மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி)<br><br>• சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 17. | மாணவர் நிகழ்வு | இனிவரும் காலங்களில் செயலாளரின் அனுமதி இல்லாமல் எந்தவொரு வெளி நிகழ்விற்கும் மாணவர்கள் பாடசாலை நேரங்களில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.<br><br>தேவை இல்லாத பரீட்சைகள் எல்லாம் பாடசாலைகளில் நடைபெறுவதை இனி வரும் காலங்களில் அனுமதிக்க முடியாது. | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.<br><br>• சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 18. | சீருடை | சீருடை கொடுப்பனவு அட்டை சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தல் வேண்டும் | • சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 19. | கணனி வள நிலையம் (CRC centers), ஆசிரியர் நிலையங்கள் ( Teacher's Centers) | கணனி வள நிலையங்கள், ஆசிரியர் நிலையங்கள் சில இடங்களில் இயங்குவதில்லை. அவற்றை இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | • மாகாணக் கல்விப் பணிப்பாளர்.<br>• சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 20. | நிர்வாக அறிக்கை ( Administration Report) | பெப்ரவரி (February) 15ஆம் திகதியிற்கு முன்னர் நிர்வாக அறிக்கையை (Administration Report) எமக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் | • மாகாணக் கல்விப் பணிப்பாளர்.<br>• சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |

**இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு நிறைவு பெற்றது.**

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**